# வகுப்பு : 7-ம் வகுப்பு

# பாடம் : தமிழ்

**இயல் 1**

**சிறுவினாக்கள்:**

1. **‘எங்கள் தமிழ்’ பாடலில் நாமக்கல் கவிஞர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

**எங்கள் தமிழ் பாடலில் நாமக்கல் கவிஞர் கூறும் கருத்துகள்:**

- ❖ நம் தாய்மொழியாகிய தமிழ் மொழி அருள் நெறிகள் நிரம்பிய அறிவைத் தருகிறது.
- ❖ அதுவே தமிழ்மக்களின் குரலாகவும் விளங்குகிறது.
- ❖ தமிழ் மொழியைக் கற்றோர், பொருள் பெற யாரையும் புகழ்ந்து பேசமாட்டார்.
- ❖ தம்மைப் போற்றாதவர்களையும் இகழ்ந்து பேசமாட்டார்.
- ❖ கொல்லாமையை குறிக்கோளாகக் கொண்டவர்கள்.
- ❖ பொய்யாமையைக் கொள்கையாகக் கொண்டவர்கள்.
- ❖ தமிழ்மொழி அனைவரிடத்தும் அன்பையும் அறத்தையும் தூண்டும்.
- ❖ அச்சத்தைப் போக்கி இன்பம் தரும்.
- ❖ தமிழ்மொழி தேன் போன்ற மொழி – என்று நாமக்கல் கவிஞர் கூறுகிறார்.

2. **தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?**

**தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகள்:**

- ❖ பகைவரை வென்றதைப் பாடுவது பரணி இலக்கியம்.
- ❖ இசைப்பாடல்களால் ஆனது பரிபாடல், கலம்பக நூல்கள், எட்டுத்தொகை.
- ❖ 107 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட, வான்புகழ் கொண்ட திருக்குறள்.
- ❖ அகம், புறம் ஆகியவற்றை மெய்ப்பொருளாகக் கொண்டு பாடப்பட்டது சங்க இலக்கியங்கள்.

3. **பேச்சுமொழிக்கும், எழுத்துமொழிக்கும் இடையே உள்ள வேறுபாடுகளுள் நான்கனை விளக்குக.**

| பேச்சுமொழி | எழுத்துமொழி |
|---|---|
| ❖ பேச்சு மொழியை உலக வழக்கு என்று அழைப்பர். | ❖ எழுத்து மொழியை இலக்கிய வழக்கு என்று அழைப்பர். |

| | |
|---|---|
| ❖ சொற்கள் பெரும்பாலும் குறுகி ஒலிக்கும். **எ.கா.** நல்லாச் சாப்பிட்டான். | ❖ சொற்கள் முழுமையாக எழுதப்படும். **எ.கா.** நன்றாகச் சாப்பிட்டான். |
| ❖ உணர்ச்சிக் கூறுகள் அதிகம். | ❖ உணர்ச்சிக் கூறுகள் குறைவு. |
| ❖ உடல்மொழி, குரல் ஏற்றத்தாழ்வு போன்றவற்றிற்கு இடமுண்டு. | ❖ உடல்மொழி, குரல் ஏற்றத்தாழ்வு போன்றவற்றிற்கு இடமில்லை. |
| ❖ இலக்கிய நடையில் அமைவதில்லை | ❖ இலக்கிய நடையில் மொழித்தூய்மை பேணப்படுகிறது. |

**4. கிளைமொழிகள் எவ்வாறு உருவாகின்றன?**

**கிளைமொழியின் உருவாக்கம்:**

- ❖ ஒரே மொழியைப் பேசும் மக்கள் வெவ்வேறு இடங்களில் வாழ்கின்றனர்.
- ❖ வாழும் இடத்தின் நில அமைப்பு, இயற்கைத் தடைகள் போன்றவற்றின் காரணமாக பேசும் மொழியில் சிறிது மாற்றங்கள் ஏற்படுகின்றன.
- ❖ அவர்களுக்கு இடையேயான தொடர்பு குறையும் போது இம்மாற்றங்கள் மிகுதியாகிப் புதிய மொழியாகப் பிரியும்.
- ❖ அவ்வாறு உருவாகும் புதிய மொழியைக் கிளைமொழி என்பர்.
- ❖ கன்னடம், தெலுங்கு, மலையாளம் போன்ற திராவிட மொழிகள் தமிழ்மொழியிலிருந்து பிரிந்து சென்ற கிளைமொழிகள் ஆகும்.
- ❖ நம் தாய்மொழியாம் தமிழ் மொழி மூலமொழி ஆகும்.

**5. குற்றியலுகரம் என்றால் என்ன? அதன் வகைகளைச் சான்றுடன் விளக்குக.**

**குற்றியலுகரம்:**

- ❖ குறுமை + இயல் + உகரம் குற்றியலுகரம்.
- ❖ குறுகிய ஓசை உடைய உகரம் குற்றியலுகரம் ஆகும்.
- ❖ கு, சு, டு, து, பு, று – ஆகிய ஆறு வல்லின உகரங்களும் சொல்லின் இறுதியில் வரும்போது, ஒரு மாத்திரையிலிருந்து குறைந்து அரை மாத்திரை அளவாக ஒலிக்கும்.

**வகைகள்:**

❖ **குற்றியலுகரம் ஆறு வகைப்படும்.**

- ➢ நெடில் தொடர்க் குற்றியலுகரம் - மாசு, ஆறு.
- ➢ ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்- எ.்.கு, அ.்.து.
- ➢ உயிர்த் தொடர்க் குற்றியலுகரம் - அரசு, பாலாறு.

- வன்தொடர்க் குற்றியலுகரம் - பாக்கு, பேச்சு.
- மென்தொடர்க் குற்றியலுகரம் - பந்து, பங்கு.
- இடைத்தொடர்க் குற்றியலுகரம் - மூழ்கு, மார்பு.

**கீழ்க்காணும் பத்தியைப் படித்து கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளி:**

1. எங்கள் தமிழ் பாடலின் ஆசிரியர் வெ.இராமலிங்கனார் ஆவார். இவரை நாமக்கல் கவிஞர் என்றும் அழைப்பர். இவர் தமிழறிஞர், விடுதலைப் போராட்ட வீரர், கவிஞர் எனப் பன்முகத் தன்மை கொண்டவர். காந்தியடிகளின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டுக் காந்தியத்தைப் பின்பற்றியதால் இவர் காந்தியக்கவிஞர் என்றும் அழைக்கப்படுகிறார். தமிழகத்தின் முதல் அரசவைக் கவிஞராக விளங்கியவர். மலைக்கள்ளன், நாமக்கல் கவிஞர் பாடல்கள், என்கதை, சங்கொலி உள்ளிட்ட பல்வேறு நூல்களை எழுதியுள்ளார்.

**வினாக்கள்**

அ) எங்கள் தமிழ் பாடலின் ஆசிரியர் யார்?

ஆ) இராமலிங்க அடிகளாரை எவ்வாறு அழைப்பர்?

இ) காந்தியக் கவிஞர் என்று அழைக்கப்படுபவர் யார்?

ஈ) நாமக்கல் கவிஞர் எழுதிய நூல்கள் யாவை?

உ) இராமலிங்க அடிகளாரின் பன்முகத் தன்மைகள் யாவை?

**விடைகள்:**

அ) எங்கள் தமிழின் பாடலின் ஆசிரியர் வெ.இராமலிங்கனார்.

ஆ) இராமலிங்க அடிகளாரை நாமக்கல் கவிஞர் என்றும் அழைப்பர்.

இ) காந்தியக் கவிஞர் என்று அழைக்கப்படுபவர் வெ.இராமலிங்கனார் ஆவார்.

ஈ) நாமக்கல் கவிஞர் எழுதிய நூல்கள் - மலைக்கள்ளன், நாமக்கல் கவிஞர் பாடல்கள், என்கதை, சங்கொலி.

உ) இராமலிங்க அடிகளாரின் பன்முகத் தன்மைகள் - தமிழறிஞர், விடுதலைப் போராட்ட வீரர், கவிஞர்.

2. தமிழ்மொழி பழமையும், புதுமையும் நிறைந்த சிறந்த மொழி. இது பேச்சுமொழி, எழுத்துமொழி என்னும் இரு கூறுகளைக் கொண்டது. இவ்விரண்டு கூறுகளுக்கும் இடையே ஒற்றுமையும் உண்டு. வேற்றுமையும் உண்டு. பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையே பெரிய அளவில் வேறுபாடு இருந்தால் அஃது இரட்டை வழக்கு மொழி எனப்படும். தமிழில் பழங்காலம் முதலே பேச்சு மொழிக்கும் எழுத்து

மொழிக்கும் இடையே வேறுபாடு இருந்துள்ளது. தொல்காப்பியர் இவற்றை உலக வழக்கு, செய்யுள் வழக்கு என்று கூறியுள்ளார்.

**வினாக்கள்:**

அ) தமிழ்மொழி ………………இ……………… நிறைந்த சிறந்த மொழி.

ஆ) மொழியின் இரு கூறுகள் யாவை?

இ) இரட்டை வழக்கு மொழி என்றால் என்ன?

ஈ) தொல்காப்பியர் உலக வழக்கு என்று எதனை குறிப்பிடுகிறார்?

உ) எழுத்து வழக்கிற்கு தொல்காப்பியர் இட்ட பெயர் ………………

**விடைகள்:**

அ) தமிழ்மொழி பழமையும், புதுமையும் நிறைந்த சிறந்த மொழி.

ஆ) மொழியின் இரு கூறுகள் - பேச்சு மொழி, எழுத்து மொழி.

இ) பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையே பெரிய அளவில் வேறுபாடு இருந்தால் அஃது இரட்டை வழக்கு மொழி எனப்படும்.

ஈ) தொல்காப்பியர் உலக வழக்கு என்று பேச்சு மொழியை குறிப்பிடுகிறார்.

உ) எழுத்து வழக்கிற்கு தொல்காப்பியர் இட்ட பெயர் செய்யுள் வழக்கு.

**3.** தமிழ்நாட்டின் பெருமைகளைக் கூறினால் அவை ஒன்றிரண்டல்ல பலவாகும். அவை வேறு எவற்றோடும் இணைசொல்ல முடியாத விந்தைகளாகும். இங்கு வீசும் தென்றலில் தேன்மணம் கமழும். சுவைமிகு கனிகளும் பொன் போன்ற தானியக் கதிர்களும் விளையும். தமிழ்நாட்டின் நன்செய் நிலவளம் ஒன்றிரண்டல்ல பலவாகும்.

பகைவரை வென்றதைப் பாடுவது பரணி இலக்கியம். அத்தோடு இசைப்பாடலான பரிபாடலும், கலம்பக நூல்களும், எட்டுத்தொகையும் வான்புகழ் கொண்ட திருக்குறளும் அகம், புறம் ஆகியவற்றை மெய்ப்பொருளாகக் கொண்டு பாடப்பட்ட சங்க இலக்கியங்களும் எனத் தமிழின் இலக்கிய வளங்கள் ஒன்றிரண்டல்ல பலவாகும்.

முல்லைக்குத் தேர்தந்து மழைமேகத்தை விடப்புகழ் பெற்றான் வள்ளல் வேள்பாரி. புலவரின் சொல்லுக்காகத் தன் தலையையே தரத் துணிந்தான் குமண வள்ளல். இவர்கள்போல் புகழ்பெற்று வாழ்ந்த வள்ளலகளின் வரலாறு ஒன்றிரண்டல்ல பலவாகும்.

**வினாக்கள்:**

அ) வீசும் தென்றலில் எது கமழும்?

ஆ) இசைப்பாடல்கள் எனக் குறிப்பிடப்படுபவை எவை எவை?

இ) முல்லைக்குத் தேர் தந்த வள்ளல் யார்?

ஈ) புலவரின் சொல்லுக்காகத் தன் தலையை தரத் துணிந்த வள்ளல் யார்?

உ) தமிழ் நாட்டில் விளைவன என குறிப்பிடப்பட்டுள்ளவை எவை?

**விடைகள்:**

அ) வீசும் தென்றலில் தேன்மணம் கமழும்.

ஆ) இசைப்பாடல்கள் எனக் குறிப்பிடப்படுபவை பரிபாடலும், கலம்பக நூல்களும்.

இ) முல்லைக்குத் தேர் தந்த வள்ளல் வள்ளல் வேள்பாரி.

ஈ) புலவரின் சொல்லுக்காகத் தன் தலையை தரத் துணிந்த வள்ளல் குமண வள்ளல்.

உ) தமிழ் நாட்டில் விளைவன என குறிப்பிடப்பட்டுள்ளவை - சுவைமிகு கனிகளும் பொன் போன்ற தானியக் கதிர்களும்.

## கட்டுரை

## தாய்மொழிப் பற்று

**முன்னுரை:**

தமிழ்மொழி மூத்த மொழி. என்றும் இளமையானது, எளிமையானது, இனிமையானது, வளமையானது, நம் வாழ்வை செழிக்கச் செய்வது. உலகச் செம்மொழிகளுள் ஒன்றாக விளங்கும் தமிழ்மொழியின் சிறப்பையும், நமது கடமையையும் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**தாய்மொழி:**

உலகில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் உள்ளன. அவற்றுள் சில மொழிகள் மட்டுமே பேச்சு வடிவம், எழுத்து வடிவம் என இரண்டையும் பெற்றுள்ளன. அதே போன்று இலக்கண இலக்கிய வளங்களையும் பெற்று செம்மொழியாக தமிழ் மொழி விளங்குகிறது. பல மொழிகள் கற்ற கவிஞர் பாரதியார்.

**“யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்**

**இனிதாவது எங்கும் காணோம்” –** என்று தமிழ் மொழியின் இனிமையை வியந்து பாடுகிறார்.

**தாய்மொழிப் பற்று:**

**“பட்டினி கிடந்து பசியால் மெலிந்து**
**பாழ்பாட நேர்ந்திடினும்**
**கட்டி இழுத்து , கை கால் இழந்து துடித்திடினும்**
**கொங்கு தமிழை பேச மறப்பேனோ” – என்றார் மகாகவி பாரதி.**

இவ்வாறு பாரதியார் தமிழ்மொழியின்மீது அளப்பறிய பற்று கொண்டிருந்தார்.

**தாய்மொழிப் பற்றுக் கொண்ட சான்றோர்:**

திருவள்ளுவர், கம்பர், இளங்கோவடிகள், பாரதியார், பாரதிதாசன்,... இவர்கள் மட்டும் அல்லாமல் அயல் நாட்டைச் சார்ந்த கால்டுவெல், வீரமாமுனிவர், ஜி.யு.போப்.... போன்றோர் தாய் மொழிக்காக தொண்டுகள் ஆற்றிய மாமனிதர்கள் ஆவார்கள்.

**நமது கடமை:**

ஆயிரக்கணக்கான தமிழ் நூல்கள் இயற்கைச் சீற்றங்களால் அழிந்துபோயின. கிடைத்தனவற்றுள் சங்ககால நூல்கள் தமிழர்தம் மொழியையையும் பண்பாட்டையும் விளக்குவனவாகத் திகழ்கின்றன. இத்தகைய விழுமிய வியத்தகு பண்பாடுகளையும் நூல்களையும் கொண்டது தமிழ்மொழி. அத்தகைய உயர்தனிச் செம்மொழியாம் தமிழ்மொழியை உணர்ந்து கற்றுப் போற்றிக் காப்போம்.

**முடிவுரை:**

"தமிழ் இனி மெல்லச் சாகும்" என்றார் முண்டாசுக் கவிஞர் பாரதியார். இன்றைய ஆங்கில மோக ஆதிக்கத்தில் நம் தாய்மொழியை சாகவிடாமல் வாழ வைப்போம்.